## 25 பாலங்களின் மீள்நிர்மாணச் செயற்திட்டம் - 2016

25 பாலங்களின் மீள்நிர்மாணச் செயற்திட்டத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்திற்கும் (கேஎவ்ஏஈடி) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 சனவரி 30 ஆம் திகதிய 886 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 1 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சாகவிருந்த தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. பிரயாணிகள் மற்றும் பொருட்களின் போக்குவரத்திற்கான அதிகரிக்கும் கேள்வியை எதிர்கொள்ளுவதற்கும், வாகன தொழிற்பாடுகள் மற்றும் வீதி பராமரிப்பு கிரயம், பிரயாண நேரம் மற்றும் விபத்துக்களை குறைப்பதன் மூலம் மேல், சப்ரகமுவ, கிழக்கு, தென், வடமேல், மத்திய, வட மாகாணங்களின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதற்கும் உரிய பகுதிகளில் பாதசாரிகள் கடவையுடனான இரண்டு பாதைகளுடன் 25 பாலங்களை மீள்நிர்மாணம் செய்தல் செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 4,632 மில்லியனிற்குச் சமமான குவைத் தினார் 10 மில்லியன் தொகையாகும். அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியம் கிரயம் முழுவதையும் நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2014 சனவரி 30 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2018 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி

செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(எ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கட்டுநிதிக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் காசுப்பாய்ச்சல் கூற்று சரியான முறையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, முதலீட்டு மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்ட காசு வெளிப்பாய்ச்சல்கள் ரூபா 73 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்த அதேநேரம் நிதியளித்தல் நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்ட காசு உட்பாய்ச்சல்கள் ரூபா 75.58 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டமானது 08 பாலங்களின் கிரயத்தை நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. பதிலாக, ரூபா 241.63 மில்லியன் தொகையான பாலங்களின் மொத்தக் கிரயம் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் நடைபெறும் வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2016 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | குவைத் தினார் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | குவைத் தினார் மில்லியன் | ரூபா மில்லியன் | குவைத் தினார் மில்லியன் | ரூபா மில்லியன் |
| கேஎவ்ஏஈடி | 10 | 4,632 | 625 | 0.45 | 218.76 | 0.57 | 277.99 |
| இலங்கை அரசாங்கம் | - | - | 45 | 0.02 | 11.10 | 0.05 | 24.75 |
| **மொத்தம்** | **10** | **4,632** | **670** | **0.47** | **229.86** | **0.62** | **302.74** |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்ட ஆவணத்தின் பிரகாரம், 03 பொதிகளின் கீழ் 25 பாலங்களை மீள்நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தங்களை வழங்குவதற்கு பட்டியலிடப்பட்டிருந்ததுடன் அதில் பொதி 01 இன் கீழ் 08 பாலங்களை மீள்நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தங்கள் வெளிநாட்டு ஒத்துழைப்புடன் உள்ளூர் நிர்மாணக் கம்பனியொன்றிற்கு ரூபா 987 மில்லியன் கிரயத்தில் 2015 செப்தெம்பர் 07 இல் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கடுவல – பியகம வீதியின் 1/1 ஆம் இலக்க பாலத்தின் மீள்நிர்மாண வேலைகள் ஒப்பந்ததாரரின் தவறுகள் காரணமாக கைவிடப்பட்டிருந்ததுடன் தங்காலை – வீரகெட்டிய வீதியின் 2/2 மற்றும் 2/3 ஆம் இலக்க பாலங்களின் மீள்நிர்மாண வேலைகள் வடிவமைப்பு மபற்றங்கள் காரணமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஏனைய பாலங்களின் மீள்நிர்மாண வேலைகளின் பௌதீக செயன்முன்னேற்றம் 35 சதவீதத்திற்குக் குறைவாகக் காணப்பட்டது. ஏனைய 02 பொதிகளின் கீழான ஒப்பந்தங்கள் 2016 திசெம்பர் 31 வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 சனவரி 13 இல் வெளிநாட்டு ஆலோசனையாளருடன் கைச்சாத்திடப்பட்ட ஆலோசனை வழங்கல் ஒப்பந்தமானது ஆலோசனை வழங்கல் உடன்படிக்கையின் பொது நிபந்தனைகளின் 2.9.1 ஆம் உட்பிரிவின் பிரகாரம் 2016 ஆகஸ்ட் 22 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் செயற்திட்டத்தால் முடிவுறுத்தப்பட்டிருந்ததன் விளைவாக ஆலோசனை நோக்கங்களிற்காக பொருட்கள் பொறியியலாளர் (Material Engineer), அளவையாளர் (Quantity Surveyor) மற்றும் வேலைத்தள பொறியியலாளர் (Site Engineer) ஆகியோரின் சேவை சிவில் நிர்மாண வேலைகளிற்காக பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் அவரின் 2016 செப்தெம்பர் 09 ஆம் திகதிய ஆர்டிஏ/எஸ்பிஎம்யூ/கேஎவ்ஏஈடி/கேடிஈபீ/வீஓஎல்.3 ஆம் இலக்க கடிதம் மூலம் செயற்திட்டப் பொறியியலாளராக உடனடியாக செயற்படும் வகையில் செயற்திட்டப் பணிப்பாளரை நியமித்திருந்தார். ஆகையால், செயற்திட்டத்தின் கீழ் செயற்திட்டப் பொறியியலாளர்கள் மற்றும் ஆலோசனையாளரிற்கு ஒதுக்கப்பட்ட கடமைகள் பிரிக்கப்படாமல் செயற்திட்டப் பணிப்பாளராலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) பாலங்களின் நிர்மாணத்திற்கான ஒப்பந்ததாரர் வெளிநாட்டு ஒப்பந்த நிறுவனமொன்றின் ஒத்துழைப்புடன் நிதி மற்றும் தொழில்நுட்ப வளங்களை பயன்படுத்துவதற்கான இயலளவை அடிப்படையாகக்கொண்டு தெரிவுசெய்யப்பட்டிருந்ததுடன் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் இரண்டும் ஒப்பந்தத்தின் நிர்மாணம், பூர்த்திசெய்தல் மற்றும் பராமரிப்பிற்கு இணைந்தும் தனித்தனியாகவும் பொறுப்புடையவர்களாவர். எவ்வாறாயினும், பொதி – 01 இற்கான ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகளிற்காக வெளிநாட்டுப் பங்காளரின் ஈடுபாடு காணப்பட்டிருக்காதமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. 2017 ஒக்தோபர் 06 இன் ஆர்டிஏ/எஸ்பிஎம்யூ/கேஎவ்ஏஈடி/ஜீஈஎன்/வீஓஎல்.04 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை வேலைகளை பூர்த்திசெய்யத் தவறியதன் மீது சட்ட நடவடிக்கையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) ரூபா 98.71 மில்லியன் தொகையான பால நிர்மாண வேலைகளிற்கான வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் 2015 நவம்பர் மற்றும் 2016 யூலை மாதங்களில் 02 சந்தர்ப்பங்களில் செயற்திட்டத்தால் விடுவிக்கப்பட்டிருந்தன. ஒப்பந்த உடன்படிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம், நிறைவேற்றப்பட்ட வேலைப் பெறுமதியில் 30 சதவீதத்தை அடைந்த பின்னர் வேலை ஆரம்பிப்பு முற்பணத்தின் அறவீடு ஆரம்பிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தப் பொதி – 01 இன் கீழான அறவீட்டு செயன்முறை 2016 திசெம்பர் 31 வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

கடுவல – பியகம வீதியின் 1/1 ஆம் இலக்க பாலத்தின் விபரமான விலைப் பட்டியலின் பிரகாரம், நிர்மாண வேலைத்தளத்தில் காப்பணையை (Cofferdam) நிர்மாணிப்பதற்கு ரூபா 5.00 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உரிய தரப்பினரிடமிருந்து அங்கீகாரங்களை பெற்றுக்கொள்ளாமல் ரூபா 24.43 மில்லியன் கிரயத்தில் காப்பணையொன்றை நிர்மாணிப்பதற்குப் பதிலாக ஒப்பந்ததாரரால் தற்காலிக துறைமேடை (Jetty) நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

### 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம் தொடர்பான சர்ச்சைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டப் பணிப்பாளர் வரிசை அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்பட்ட 2016 ஒக்தோபர் 20 ஆம் திகதிய அவரின் கடிதத்தின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அனுமதியினை பெற்றிருந்த போதிலும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 ஆண்டுகளிற்கு மேலாக 01 பிரதி செயற்திட்டப் பணிப்பாளர், 03 பிரதம பொறியியலாளர்கள், 06 செயற்திட்டப் பொறியியலாளர்கள் மற்றும் 09 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் போன்ற முக்கிய பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் 2015 திசெம்பர் மற்றும் 2016 சனவரி மாதங்களில் செயற்திடட்டத்தால் 03 ஆலோசனையாளர்கள் மற்றும் 02 பொதுமக்கள் தொடர்பு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 1.61 மில்லியன் கூட்டுத்தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.